IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No. 79/2022**

| DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|

| NAME | கோமதி |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of **14.11.2024**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

1. நான் இந்த வழக்கு எனது தந்தை சம்பத்தின் வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது கோயம்புத்தூரில் வசித்து வருகிறேன். நான் முஸ்லீமாக மதம் மாறியிருக்கிறேன். பிறப்பில் நான் இந்து மதம். எனது தாவாவிலும், எனது முதல் பிரமாண வாக்குமூலத்திலும் எனது மதத்தை குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. எனது தந்தை 2005 ஆம் ஆண்டு காந்திநகர் வீட்டில் வசித்து வந்திருந்த போது வெளியில் சென்றவர் திரும்பி வரவில்லை காணாமல் போய்விட்டார்.

3. வட்டாட்சியர் அறிக்கையில் எனது தந்தைக்கு மனநிலை சரியில்லதவர் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். எனக்கு 2008 ஆம் திருமணம் நடைபெற்றது. எனது தாயார் 2013 –ல் இறந்துவிட்டார். 2 வது வாதியான எனது சகோதரி சித்ராவிற்கும் மனநிலை சரியில்லை கூறுகிறார் என்றால் சரிதான்.

4. எனது தாயாரும் இறந்துவிட்டதால் எனக்கு திருமணம் ஆகி கோயம்புத்தூரில் வசித்து வருவதாலும் எனது சகோதரி மனநிலை சரியில்லததாலும் எனது தந்தை காணாமல் போய்விட்டார் என்றால் சரியல்ல.

5. எனது அப்பாவின் தாயார் முனியம்மாள் தற்போது உயிருடன் இல்லை. எனது அப்பாவின் தந்தை கண்ணன் அவரும் தற்போது உயிருடன் இல்லை. எனது தாவாவிலும், எனது முதல் பிரமாண வாக்குமூலத்திலும் எனது தந்தையின் பெற்றோர் பற்றி குறிப்பிடாமல் விவரங்களை மறைத்து தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. எனது சகோதரி சித்ரா எனது தாயாரின் அம்மாவான கோவிந்தம்மாளிடம் வசித்து வருகிறார். 2 வது வாதியான சித்ரா மனநிலை சரியில்லததால் அவரை தனிப்பட்ட முறையில் ஒரு தரப்பினராக சேர்த்தது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

7.எனது தந்தைக்கு மனநிலை சரியில்லாததை மறைத்து காணாமல் போய்விட்டார் என்று வழக்கு தாக்கல் செய்தது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம்.

8. அவரை வெளிப்புற நோயாளியாக தான் சிகிச்கை பெற்று வந்தோம். எனது தந்தை காணாமல் போனதது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை. துண்டு பிரசுரம் மற்றும் நாளிதழில் விளம்பரம் செய்தேனா என்றால் இல்லை. ஆனால் தேடி பார்த்தோம்.

9. எனது தந்தை மனநிலை சரியில்லததால் அவர் வீட்டிற்கு வரவில்லை என்றாலும் அவர் உயிருடன் இருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. நானும் கோயம்புத்தூரில் வசித்து வருவதாலும் எனது சகோதரி மனநிலை சரியில்லததாலும் நாங்கள் எங்கள் தந்தையை தேடி பார்த்தோம் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

10. வா.சா.ஆ.3 கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்று உள்ளீர்கள். அவை வட்டாட்சியரிடம் வாங்கினால் தான் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல. எனது தாவாவில் எனது தந்தை காணாமல் போனது குறித்தும் நாங்கள் தான் வாரிசுதாரர்கள் என்பதற்கும் நிரூபணம் செய்ய உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யததால் எனது தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

11. குறிப்பாக, எனது மதத்தை பற்றியும் எனது தந்தைக்கு மனநிலை சரியில்லாததை, பற்றியும், எனது சகோதரிக்கு மனநிலை சரியில்லாததை பற்றியும் எனது தந்தையின் பெற்றோர்கள் பற்றியும் விவரங்களை தெரிவிக்காமல் தாவாவை தாக்கல் செய்தது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

12. இந்த வழக்கில் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களும் எனது தந்தை காணாமல் போனததற்கும் எனது தந்தை வாரிசுதாரர்கள் என்பதற்கு ஆதரவாக எனது தாவாவிலும், முதல் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்பதால் தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.Rajanandhivarmasiva,
District Munsif,
Gudiyattam.